ஆசிரியர் தேர்வு வாரியம்

**பத்திரிகைச் செய்தி**

2025 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 48 பாடத்திற்கான உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு நியமனம் செய்வதற்கான அறிவிக்கை (Notification) எண். 04/2025ன்படி ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 16.10.2025 அன்று வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 27.12.2025 அன்று காலை (ஒளிக்குறி மதிப்பெண் உணரி) OMR Based வழியாக தேர்வுகளும், மாலை விளக்கமான (Descriptive type) விடைத் தேர்வுகளும் நடத்தப்பட்டது.

மேற்படி நியமனத் தேர்வுக்கு மொத்தம் 47,047 பணிநாடுநர்கள் விண்ணப்பித்தனர், அதில் 42,064 பேர் எழுத்துத் தேர்வு எழுதினர். மேற்படி தேர்வுகளின் பகுதி A & B க்கான தற்காலிக விடைக்குறிப்பு (Tentative Answers Key) அதனைத் தொடர்ந்து அவ்விடைக்குறிப்புகள் மீதான ஆட்சேபனைகளுக்கான விசைச் செயலி (Objection Tracker) மூலம் 05.01.2026 அன்று முதல் 13.01.2026 வரை தொடர்புடைய அதிகாரப்பூர்வ ஆதாரங்கள் மற்றும் பிரதிநிதித்துவங்களுடன் ஆட்சேபனைக்கான ஆசிரியர் தேர்வு வாரிய வளைதளத்தில் உள்ள விசைச் செயலி (Objection Tracker) மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் பெறப்பட்ட அனைத்து ஆட்சேபனைகளையும் பாட நிபுணர்களால் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு இறுதி விடைக்குறிப்பு 25.02.2026 அன்று ஆசிரியர் தேர்வு வாரிய வளைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, தற்போது ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்படி தேர்வுகளின் 48 பாட விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. அவ்வகையில் தற்போது மதிப்பீட்டுப் பணி நிறைவடைந்துள்ள கீழே உள்ள 5 பாடங்களுக்கான இறுதி விடைக் குறிப்பு (Final Key), மதிப்பெண் பட்டியல் (Mark details) மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு (Certificate Verification) & நேர்காணல் (Interview) பட்டியலை வெளியிட TRB முடிவு செய்யப்பட்டு அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மதிப்பெண் மற்றும் இனச் சுழற்சி முன்னுரிமை அடிப்படையில் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்காணல் நடத்தப்படும் பணிநாடுநர்களின் பட்டியல் (5 பாடங்களுக்கு மட்டும்) 25.02.2026 அன்று ஆசிரியர் தேர்வு வாரிய வளைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

| S.No | Subject |
|---|---|
| 1 | History Education |
| 2 | Human Rights |
| 3 | Indian Culture and Tourism |
| 4 | Marine Biology |
| 5 | Wildlife Biology |

மேலும், மேற்படி பாடங்கள் தவிர்த்து பிற பாடங்களுக்கான மதிப்பீட்டு பணிகள் ஆசிரியர் தேர்வு வாரியத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது, மதிப்பீட்டு பணிகள் முடிந்தவுடன் விரைவில் மற்ற பாடங்களுக்கான பட்டியல்கள் படிப்படியாக வெளியிடப்படும்.

மேற்கண்ட 5 பாடங்களுக்கான பணிநாடுநர்களின் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்காணல் ஆசிரியர் கீழ்கண்டவாறு தேர்வு வாரியத்தில் நடைபெறும்.

1. **சான்றிதழ் சரிபார்ப்பு** - 23.03.2026   2. **நேர்காணல்** - 24.03.2026

தேர்வர்களுக்கு தனியாக பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் மற்றும் SMS மூலம் தகவல் அனுப்பப்படும்.

நாள். 25.02.2026

தலைவர்